ஈழநாதம்
EELANATHAM
மக்கள் நாளிதழ்
பக்கங்கள் - 08
நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 17 | 31-05-2003 | சனிக்கிழமை | ஓசை 102

அச்சகங்கள் அலுவலகங்கள் மாணவர்களுக்கு
சாணக்கியா
அச்சுப் பொருட்கள் காகிதாதிகள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

# அரசாங்கத்தின் புதிய பிரேரணைகள் விடுதலைப்புலிகளால் நிராகரிப்பு!

## அன்ரன் பாலசிங்கம் ரணிலுக்குக் கடிதம்



**வட-கிழக்கு புனர்நிர்மாணம், அபிவிருத்தி தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் சமர்ப்பித்த புதிய பிரேரணைகளை விடுதலைப்புலிகள் இயக்கம் நிராகரித்துள்ளது. இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளின் தரப்புக்குத் தலைமைதாங்குப வருமான அன்ரன்பாலசிங்கம் அவர்கள் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நான்கு பக்கக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.**

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தின் யுத்தத்தால் சிதைவடைந்த பொருளாதாரத்தை மீளக்கட்டமைக்கவும், அப்பிரதேசத்தில் இயல்புநிலையைத் தோற்றுவிக்கவும் கூடிய, தேவையான அதிகாரங்களுடனும் சட்ட அங்கீகாரத்துடனும் திட்டமிடல், செயற்படுத்தலில் புலிகளின் கூடிய பங்களிப்புடனும் கூடிய இடைக்கால நிர்வாக கட்டமைப்பையே பரிந்துரைத்திருந்தார்.

இரண்டு காரணங்களுக்காக

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

## - மன்னாரில் இடம்பெற்ற -
## தமிழீழப் பெண்களின் மகளீர் சங்கமம்!

(மன்னார்)

தமிழீழப் பெண்களின் மகளீர் சங்கமம் நேற்று மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்றது.மன்னார் நகர சபை மண்டபத்தில் காலை 10.30 மணிக்கு இம்மாநாடு ஆரம்பமானது.

இதில் பொதுச்சுடரினை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அமிர்தாப் ஏற்றி வைத்தார். தேசியக் கொடியினை தமிழீழ மகளீர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, திருமலை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட பெண்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (மி)

## - தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் -
## அபிவிருத்திப் பணிகளை படையினர் தடுத்து நிறுத்தினர்

(கொழும்பு)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் மேற்கொள்ளப்பட இருக்கும் அபிவிருத்திப் பணிகளை சிறிலங்காப் படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள தெல்லிப்பளை பகுதியில் நெக்கோட் நிறுவனத்தினால் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கென 42 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியுதவியுடன் மேற்படி கல்லூரிக்கு ஆய்வு

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

## அரசு தெளிவான பதில் அனுப்பாதது ஏமாற்றாகவே கருத வேண்டியுள்ளது

### தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பா.உ.கஜேந்திரகுமார்



விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு ஒன்று கேட்பது நியாயமானது. அதன் அடிப்படையில் சிறிலங்கா அரசு தெளிவான பதிலை அனுப்பாதது ஒரு ஏமாற்றாகவே கருத வேண்டியுள்ளது என தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்வது என்றால் அந்த மாநாட்டின் மூலம் கிடைக்கப் பெறுகின்ற நிதி சரியான ஒரு தெளிவான நிர்வாகம் மூலமாகத்தான் செலவு செய்யப்பட வேண்டும்.

அரசாங்கம் அனுப்பி வைத்துள்ள ஆலோசனைகளை நாங்கள் படிக்கவில்லை. அப்படி இருக்கவும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அடி கொடுத்துள்ளார். அந்தக் கடிதத்தில் இருக்கும் கருத்துக்கள் மிகவும் கடுமையான

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

## குற்றப்புலனாய்வுப் பிரிவு ஊழியர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

சிறிலங்கா குற்றப்புலனாய்வு பிரிவை சேர்ந்த ஒருவர் கொள்ளைக் கோஷ்டி ஒன்றுடன் சேர்த்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட பாதாள உலக கோஷ்டியினர் மூன்று பேர் மீரிகான பொலிசாரினால் கைது செய்யப்பட்டபோதே அவர்களில் இந்த குற்றப்

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

## -புலிகளின் கடற்பயணம் குறித்த அறிக்கை-
## அபிப்பிராயங்களை வெளியிட கண்காணிப்புக்குழு கோரல்

விடுதலைப்புலிகளின் கடல் பயணம் தொடர்பான அறிக்கை குறித்து தங்களது அபிப்பிராயங்களை வெளியிடுமாறு சிறிலங்கா கடற்படையினரையும் விடுதலைப் புலிகளையும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கேட்டுள்ளது.

இந்த அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டு பல வாரங்கள் ஆகியும் அது

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

## - மக்கள் குடியிருப்புக்களில் நிறுவப்பட்டுள்ள -
## தென்மராட்சி படைமுகாம்கள் விஸ்தரிப்பு; புதிய படைமுகாம்கள் அமைப்பதிலும் தீவிரம்!

தென்மராட்சிப் பகுதியில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள படைத்தளங்களை மேலும் விஸ்தரிப்பதிலும் புதிய முகாம்களை அமைப்பதிலும் சிறிலங்கா படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் வரணிப்பகுதியில் அமைந்திருந்த 52 ஆவது படையணியின் பாரிய படைத்தளம் ஒன்று விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன், இதனை அண்டிய கரம்பைக் குறிச்சிப்பகுதியில் புதிய படைத் தளங்களை படைத்தரப்பினர் நிர்மாணித்து வருகின்றனர்.

கடந்த ஓரிரு தினங்களாக இடம்பெற்றுவரும் இப்பணிகளுக்கென இராணுவ வாகனங்களில் பெருமளவு உபகரணங்கள் எடுத்துவரப்பட்டு முகாம் அமைப்பு பணி இடம்பெற்று வருகின்றது.

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

## - உயர் வகுப்பில் கல்வி கற்க -
## புதல்விக்கு அனுமதி மறுப்பு; பாடசாலை முன் தந்தை தற்கொலை!

(கொழும்பு)

தமது புதல்விக்கு உயர்தர வர்த்தகப் பிரிவில் கல்விகற்க பாடசாலை அதிபர் அனுமதி அளிக்காததால் தந்தை ஒருவர் கொலன்னாவ பாலிக வித்தியாலயத்தின் முன்பாக தனக்குத் தானே தீமூட்டித் தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இவரது மகள் கடந்த வருடம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் வர்த்தகப் பாடத்தில் அதிவிசேட புள்ளியைப் பெற்றிருந்தார். ஆயினும் அவர் எதிர்பார்த்தபடி உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வி பயில அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வீரவணக்கம்

முல்லை. மாவட்டத்தில் நேற்று போராளி ஒருவர் கிணற்றில் தவறுதலாக விழ்ந்து சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை கனிமொழி (விக்னேஸ்வரன் விஜிதா, இல-925, திருநகர், கிளிநொச்சி, த.மு: இல-683 விநாயகபுரம், துணுக்காய், மல்லாவி) என்னும் போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## - இராணுவ-பொலிஸ் பிரசன்னத்துடன் -
## புலிகளின் வடமராட்சி கோட்ட அலுவலகம் கண்காணிப்புக்குழுவினால் சோதனை!

(வடமராட்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வடமராட்சிக் கோட்ட அலுவலகம் இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் பிரசன்னமாக இருக்க சர்வதேச கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலக பிரதிநிதியால் நேற்று சோதனையிடப்பட்டுள்ளது.

நெல்லியடி வதிரிச் சந்திப் பகுதியில் உள்ள அரசியல் துறை அலுவலகத்திற்கு காலை 11.00 மணிக்கு கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக பிரதிநிதி சென்றார். இவருடன் நான்கு ஜீப் வண்டிகளில் இராணுவ மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

ஆயினும் விடுதலைப்புலிகள் அமைப்பின் போராளிகள் எவரும் அற்ற நிலையில் அலுவலகப் பணியாளர்கள் சிலர் மட்டுமே அங்கு இருந்தனர். வடமராட்சி கிழக்கின் மணற் காட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகள் சிலர் சக்தி வாய்ந்த தொலை த்தொடர்பு கருவிகளுடன் நடமாடிய தாக

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

# 'நியாப்' திட்ட வேலைகளைப் பார்வையிட உலக வங்கி அதிகாரிகள் கிளி. வருகை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 'நியாப்' திட்டத்தினால் மேற்கொள்ளப்படும் குளவேலைத் திட்டங்களைப் பார்வையிடுவதற்கு உலக வங்கி அதிகாரிகள் கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளனர்.

எதிர்வரும் ஜூன் 6ஆம் திகதி மேற்படி அதிகாரிகள் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு 'நியாப்' நிறுவன வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராயவுள்ளதுடன், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் வேலைத் திட்டங்களையும் நேரில் பார்வையிட உள்ளனரென கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். (சோ)

# - புலிகள் அமைப்பில் இணைந்த - இரு சிறுவர்கள் வவுனியாவில் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(வவுனியா)

விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்த இரு சிறுவர்கள் பெற்றோரிடம் திருப்பி ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் சிறிநாத் அவர்கள் இவர்களை பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# 12 பொலிசார் திடீர் இடமாற்றம்; பொலிஸ் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு!

(கொழும்பு)

தொழில் சட்டவிதிகளுக்கு முரணான வகையில் பொலிசாரை திடீர் இடமாற்றம் செய்து வருவது தொடர்பாக சிறிலங்கா பொலிஸ் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையக ஊடகப் பிரிவின் 12 பொலிசார் அண்மையில் இவ்வாறு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக பொலிஸ் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறும் பாதிக்கப்பட்டவர்கள் கோரியுள்ளனர்.

குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லாத நிலையில் கடமை தவறாத தங்களை திடீர் என்று இடமாற்றுவது தமது தொழில் உரிமைகளையும் அடிப்படை மனித உரிமைகளையும் மீறும் செயல் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கரடிப்போக்கு சந்திக்கருகே உடைந்த ஆபத்தான பாலம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தி க்கு அண்மையில் உடைந்த ஆபத்தான நிலையில் உள்ள பாலத்தி னூடாகச் செல்லும் மக்களும், பாடசாலை மாணவர்களும் பெரும் சிரம த்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

கரடிப்போக்கு சந்தியில் இருந்து கணேசபுரம் செல்லும் வீதியில்



உள்ள வாய்க்காலில் உள்ள பாலம் இதுவரையும் திருத்தப்படாத நிலையில் இப் பாலத்திற்கு குறு க்கே இரண்டு தென்னை மரக்குற்றிகள் இடப்பட்டுள்ளன. நாள் ஒன்றிற்கு துவிச்சக்கரவண்டிகளி லும் கால்நடையாகவும் பல நூற்றுக் கணக்கான மக்களும், பாடசாலை மாணவர்களும் ஏ-9 வீதிப்போக்கு வரத்து அதிகரித் துள்ளமையினால், விபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டு இவ்வீதியைப் பயன்படுத்தி வருகி ன்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# கொழும்பில் அரசிற்கெதிராக ஜூன் 3 இல் ஆர்ப்பாட்டம்!

## சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் கொள்கையை கண்டித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்வரும் 3 ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தவுள்ளது. இதற்கான முடிவு சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க, சுதந்திரக் கட்சியின் செயலாளர் கைத்திரிபால சேனநாயக்க, மங்கள சமரவீர, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, மாகாண அமைச்சர்கள் மற்றும் அங்கத்தவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தப் போராட்டம் தொடர்பான இறுதி முடிவுகளை எடுக்க சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் நாளை கூடவுள்ளனர்.

## மென்பந்துப் போட்டி

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான வலய மட்ட மென்பந்துப் போட்டி இன்று புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (20)

# அளம்பில் அந்தோனியார் கோவில் பெருநாள் நாளை ஆரம்பம்

முல்லை அளம்பில் அந்தோனி யார் ஆலய வருடாந்த பெருநாள் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ளது. வரும் 13ஆம் திகதி காலைப் பூசையுடன் திருநாள் நிறைவுபெறும் எனவும் இப்பெரு நாளுக்கான போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளா தாகவும் அளம்பில் பங்குத் தந்தை யூட் அமலதாஸ் அடிகளார் தெரி வித்துள்ளார். (20)

# ஒட்டுசுட்டான் பி.செ.பிரிவில் 30 குடும்பங்கள் மீள்குடியமர்வு

(ஒட்டுசுட்டான்)

வவுனியாவில் இருந்து ஒட்டுசுட்டான் பிரதேச பிரிவுக்கு 30 குடும்பங்களைக் கொண்ட 120 அங்கத்தவர்கள் வருகை தந்துள்ளனர்.

கடந்த புதன்மாலை சின்னத்தம்பி வித்தியாலயத்திற்கு வருகை தந்த மக்களுக்கு முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும் பொருண்மிய மதியுரையகமும் சமைத்த உணவுகளை வழங்கின. ஒட்டுசுட்டான் கிராமசேவகன் தலைமையில் இம்மக்களை உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் முத்துஐயன்கட்டுக்குளம், ஒட்டுசுட்டான், மாங்குளம் தண்டுவான் ஆகிய இடங்களில் உள்ள கிராம சேவகர்களின் பிரிவில் உள்ள மக்களே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டனர். (05)

# கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட கல்விக் குழுக்கூட்டமும், சுகாதாரக் குழுக்கூட்டமும் எதிர்வரும் 03ஆம் திகதி கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு கல்விக்குழுக் கூட்டமும் பகல் 11.30 மணிக்கு சுகாதாரக் குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளதென கிளி. அரச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ)

# சமாதான விளையாட்டுக்கான முன்னோடிக் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு - தெற்கு சமாதான விளையாட்டுவிழா யாழ். மாவட்டத்தில் நடாத்துவதற் கான நடவடிக்கைகளை சிறிலங்கா அரசு மேற்கொண்டு வருகின்றது.

எதிர்வரும் செப்டெம்பர் 4ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை மேற்படி விளையாட்டு விழா யாழில் இடம்பெறவுள்ளது.

இதற்கான முன்னோடிக் கலந்துரையாடல்கள் எதிர்வரும் 2ஆம் திகதி யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் காணி அமைச்சர் ராஜித சேனாரத்தின தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வட-மாகாண பிரதேச செயலர்கள், மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களைக் கலந்து கொள்ளும் வண்ணம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஆளுங்கட்சி பாராளு. உறுப்பினர் பிலிப்தேவா ஆராட்சி கைது

கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஆளுங்கட்சியின் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் பிலிப் தேவா ஆராட்சி கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணைக்குப் பிறகு இவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை புத்தளம் மாவட்ட ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்க பண்டாரவும் செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# 20 முன்னோடி விவசாயிகளுக்கு விளைதிறன் கூடிய விதை நெல்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 20 முன்னோடி விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு இருபது முன்னோடி விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களமும் முல்லைத்தீவு மாவட்ட தமிழர் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து விளை திறன் கூடிய விதை நெல் தலா ஒரு மூடை வீதம் வழங்கப்பட்டுள்ளதாக பொருண்மிய செய்திக்குறிப்பு தெரிவிக்கின்றது. (பா)


## வரி விளம்பரம்

**விவசாயிகளே!**

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

**அறிவுடைமை கல்வி நிலையம், கிளிநொச்சி**

2004, 2005 க்கான PHYSICS - செந்தில்குமரன் B.Sc. CHEMISTRY - சரவணபவான் B.Sc. 02.06.2003 திங்கள் பி.ப 4.00 க்கு ஆரம்பமாகின்றன. மேலதிக விபரங்களுக்கு: நிர்வாகி. (சி-3296)

## பணிநிலை வெற்றிடம்

கிளிநொச்சியில் இயங்கி வரும் சிவா வர்த்தக நிறுவனத்திற்கு பின்வரும் விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

1. கணக்காளர்
2. விற்பனையாளர்
3. சாரதி

வயது எல்லை 25-45 வரை. 2/5 வருட முன் அனுபவம் தேவை. தேவையான ஆவணங்களுடன் நேரில் வருக.

காலம் : – 5–6–2003

நேரம் : – 9.00 – 1.00மணிவரை

சம்பளம் நேரில் பேசித்தீர்க்கப்படும்.

சிவா வர்த்தக நிலையம்,
23, கண்டி வீதி, கிளிநொச்சி.

(3302)

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டிக் கிரியையும்



**அமரர் திரு. நாகநாதி – தம்பையா**

(கணேந்திரனையார்)

குமுழமுனை, முள்ளியவளை.

மாதமொன்று கடந்தாலும்
மறக்குமா உன் முகம் ஐயா!
மாநிலத்தில் நாமிருக்கும் வரை
மாறாது உங்கள் நினைவு

அன்னாரது இறைபதப்பேறுகுறித்து அந்தியேட்டி ஆத்ம சாந்திக் கிரியைகள் 01.06.2003 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்திக் கிரியைகளில் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குமுழமுனை,
முள்ளியவளை. (3222)

குடும்பத்தினர்.

- காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண -

# இரு நாடுகளும் நிறையவே விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும்

## - இந்தியப் பிரதமர் வாஜ்பாய்

**(புதுடில்லி)**

**காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண இரு நாடுகளும் நிறையவே விட்டுக் கொடுக்க வேண்டி இருக்கும். அதற்கு முதலில் நம்பிக் கையை வளர்க்க வேண்டும்.**

இவ்வாறு பிரதமர் வாஜ்பாய், பெர்ளினில் பிரபல நாளேடான டைஸ் ஸ்பேகிளுக்கு பேட்டி அளிக்கையில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இதற்குப் பொருளாதார ஒத் துழைப்பை மேம்படுத்தி இரு நாட்டு மக்களும் சந்திக்க அதிக வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண் டும் என்றும் கூறியுள்ளார்.

முஸ்தில் முகாமிதீன் பயங் கரவாதக் குழு மீது பாகிஸ்தான் விதித்த கட்டுபாடுகளை வர வேற்ற அவர் எனினும் இத னைத் தொடர்ந்து மற்றைய நட வடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் சனாதிபதி முஷா ரப் நம்பத்தகுந்தவரா எனும் கேள்விக்கு, அவருடன் பேச்சு நடாத்தத் தயார் என்றும், தமது மூன்றாவது கடைசி சமாதான முயற்சி தோல்வி அடையு மானால் ஓய்வு பெறுவதாகவும் வாஜ்பாய் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான உறவுகளை மேம்படுத்துவதற்கு இரு நாடுகளும் மேற்கொண் டுள்ள முயற்சிகள் ஊக்க மளிப்பதாக உள்ளன என்று அமெரிக்காவின் தேசிய பாது காப்பு ஆலோசகர் காண்டலிசா ரைஸ் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர் களிடம் பேசிய அவர், தங் களின் நட்புறவை மேலும் வலுப் பெறச் செய்வது இவ்விரு அண் டைய நாடுகளின் கைகளிலேயே உள்ளது என்றும் அவர் கூறியுள் ளார்.

ஜீ-8 அமைப்பில் உள்ள அனை த்து நாடுகளும் இதுபற்றி மகிழ் ச்சி கொண்டுள்ள தாகவும் அவர் கூறியுள்ளார்.



## பலஸ்தீன பிரதமர்-புஷ் அடுத்த வாரம் பேச்சு

பலஸ்தீனப் பிரதமர் முகமட் அப்பாசிற்கும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள் யூ. புஷ்சிற் கும் இடையிலான பேச்சுக்கள் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

பலஸ்தீன தீர்விற்காக இஸ்ரேலிய அமைச் சரவை ஆதரவைத் தெரிவித்த பின்னர் நடைபெற வுள்ள பலஸ்தீனத் தரப்பினருடனான முதல் சந்திப்பு இதுவாகவுள்ளது.இதேவேளை, பலஸ் தீன தீவிரவாத அமைப்பாளர் கமாஸ் உடன் அடுத்த வாரம் போர் நிறுத்த உடன்பாடு ஒன்றும் கைச் சாத்திடப்படவுள்ளது.

## அமெ. படைச் சிப்பாய் ஈராக்கில் சுட்டுக்கொலை

ஈராக்கில் அமெரிக்கப் படை வீரர் ஒருவர் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஈராக்கின் பிரதான வழங்கு சாலையில் சென்று கொண்டிருந்த போதே இவர் சுட்டுக் கொல்லப்பட் டுள்ளார். தற்போது ஒரு லட்சத்து நாற்பத்தே ழாயிரம் அமெரிக்கப் படையினர் ஈராக்கில் நிலை கொண்டுள்ளதாக அமெரிக்க தலைமையகமான பென்ரகன் தெரிவித்துள்ளது. ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல்களை சதாமின் ஆதரவாளர் கள் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரி. படையினரைப் பாராட்ட ரொனி பிளேயர் ஈராக் விஜயம்

(பிரித்தானியா)

பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் ஈராக்கிற்கு விஜயம் செய்துள்ளார். ஈராக் போரில் பிரித்தானியப் படைகள் வெற்றி யீட்டியதை பாராட்டுவதற்கே அவர் ஈராக் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் உள்ள பிரித் தானியப் படைகளின் மத்தியில் உரையாற்றிய பிரதமர் ரொனி பிளேயர் பிரித்தானிய படை களின் நடவடிக்கையால் தமது நாடு பெருமிதம் அடைந்திருப்ப தாகவும் கூறியுள்ளார்.

பஸ்ரா நகரத்திற்கு விஜயம் செய்த பிரதமர் ரொனி பிளேயர் பாடசாலை ஒன்றிற்கு விஜயம் செய்து சிறுவர் சிறுமியர்களோடு கலந்துரையாடியுள்ளார்.

## தாய்வானில் மேலும் 50 பேருக்கு 'சார்ஸ்'

(தாய்பேய்)


சார்ஸ் நோய் பீடிக்கப் பட்டவர்களாகத் தாய்வானில் புதிதாக 50 பேர் இனங் காணப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்களில் 40 பேர் தொற்று ஏற்படும் சாத் தியக் கூறுகளைக் கொண்ட வர்களென மீள வகைப்படுத் தப்பட்டுள்ளனர்.

தாய்வான் சார்ஸ் ஆட் கொல்லி பரவுதலைக் கட்டுப் படுத்தும் அளவிற்கு முன் னேறி வந்திருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித் துள்ளது.

இங்கு சார்ஸ் காரணமாக 660 பேர் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும் சமீபத் திய நாட்களில் புதிதாக இனங்காணப்பட்டவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியில் தான் காணப்படுகின்றது.

இங்கு 81பேர் ஆட் கொல்லி நோய்க்குப் பலி யாகியுள்ளனர்.



அல்ஜீரியாவில் கடந்த புதன்கிழமை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்ட போது இடிந்து வீழ்ந்துள்ள பள்ளிவாசல் ஒன்று.



அண்மையில் இனக்கலவரம் ஏற்பட்ட ஐவரிகோஸ்ட் கிராமம் ஒன்றுக்குள் நுழைந்துள்ள பிரான்ஸ் படைவீரர்கள்.

## ஜீ-8 நாடுகளின் மாநாட்டிற்கு எதிராக பிரான்சில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

### - உலக மயமாதல் எதிர்ப்புக்குழுவினர் நடவடிக்கை

(பிரான்ஸ்)

பிரான்ஸ் நாட்டில் நாளை நடைபெறவுள்ள ஜீ எட்டு நாடு களின் மாநாட்டிற்கு எதிராக உலக மயமாதல் எதிர்ப்புக் குழு வினர் ஆர்ப்பாட்டம் நடத்தவுள் ளனர்.

ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் இந்தப் போராட்ட நடவடிக்கை களில் கலந்து கொள்ள ஆயத்த மாக இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தப் போராட்டத்தை சமா ளிக்கும் வகையில் ஜீ.எட்டு மாநாடு நடைபெறவிருக்கும் எபியோ நகரத்துக்கான வழிகள் மூடப்பட்டிருப்பதாகவும் நக ரத்தில் இருந்து 10 கிலோ மீற் றருக்குள் ஆர்ப்பாட்டம் நடத்த தடைவிதித்திருப்பதாகவும் பிரான்ஸ் செய்திகள் தெரிவிக் கின்றன.

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர் லாந்து படையினர் அங்கு குவிக் கப்பட்டிருப்பதாகவும் தாக்குதல் உலங்கு வானூர்திகள் ஏவு கணை எதிர்ப்பு பீரங்கிகளும் தயார் நிலையில் வைக்கப்பட் டுள்ளன என்றும் தெரிவிக்கப்படு கின்றது.



சனாதிபதி அலஜன்ரோவின் 30 நாள் அவசர கால தடைச் சட்டத்தினால் வடக்கு லீமாவில் பெருநாட்டு விவசாயிகள் படைவீரர்களோடு மோதலில் ஈடுபடுகின்றனர்.

## ரஷ்ய-அமெ. தலைவர்கள் விரைவில் சந்திப்பர்

அமெரிக்காவுடனான கசப் புணர்வை போக்கிக் கொள்வதற் காக ரஷ்ய வெளியுறவு அமைச் சர் நேசக்கரம் நீட்டியுள்ளார்.

லண்டன் பத்திரிகை ஒன்று இரு தரப்பு உறவுகளும் கடுமை யான பலப்பரீட்சையைத் தாண்டி யுள்ளன என்று கூறியுள்ளார். ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் ஈராக் மீது போர் தொடுத்த போதும், புளுமைப்பு விவகாரத்திலும் ரஷ்யா, அமெ ரிக்காவின் நடவடிக்கைகளை வெளிப்படையாக ஆட்சேபித்து வந்தது. இத்தகைய பின்னணி யில் ஜீ-8 மாநாட்டுடன் இணைந்ததாக ரஷ்ய, அமெரிக்க தலைவர்கள் சந்திக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.



லாகூரில் பொலீசாரின் வாகனத்திலிருந்து அரச எதிர்ப்பு சுலோகங்களை ஏந்தி கூச்சலிடும் பெண் ஒருவர்




1. உலகில் பரப்பளவில் பெரிய நாடு எது?
   * ரஷ்யா

2. உலகிலேயே முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட மொழியாகக் கூறப்படுவது எது?
   * இலத்தீன்

3. உலகில் மிகச்சிறிய மியூஸியம் எங்கேயுள்ளது?
   * ஜேர்மனியின் பேர்ளின் நகரில்

4. உலகின் மிகப்பழைய பாராளுமன்ற ஜனநாயக முறை எந்த நாட்டில் உள்ளது?
   * பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில்

5. பெண் காவலர்கள் அதிகம் உள்ள நாடு எது?
   * இங்கிலாந்து.

6. ஓக் (oak) மரத்தின் பழம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
   * அகார்ன்

7. மிகக் குறைந்தகால போராட்டத்தில் சுதந்திரம் பெற்ற நாடு எது?
   * பங்களாதேஷ் (09 மாதங்களில்)

8. உலகின் முதல் நகைச்சுவைப் பத்திரிகை எது?
   * 1841இல் தொடங்கப்பட்ட ''பஞ்ச்'' பத்திரிகை

9. சைவர் (பூச்சியம்) அறிமுகப்படுத்தியவர்கள் யார்?
   * இந்தியர்கள்.

10. உலகில் அதிக தீவுகளைக் கொண்ட நாடு எது?
   * இந்தோனேசியா

11. நாட்டின் பெயர் குறிப்பிடப்படாது எந்த நாட்டில் முத்திரை வெளியிடப்படுகின்றது?
   * ஐக்கிய இராட்சியம்

12. பறவைகளில் மிக வேகமாக ஓடும் பறவை எது?
   * தீக்கோழி

13. உலகில் அழகான நகரம் என்று வர்ணிக்கப்படும் நகரம் எது?
   * அவுஸ்திரேலியாவின் சிட்னி.

14. மகாகவி பாரதியார் சொந்தமாக நடத்திய பத்திரிகையின் பெயர் என்ன?
   * இந்தியா

15. இலங்கையின் சனத்தொகை முதன் முதலில் எப்போது கணக்கெடுக்கப்பட்டது?
   * 1871இல்

16. பனிக்கட்டி வீடு என வர்ணிக்கப்படுவது எதனை?
   * கிறீன்லாந்தை

17. இந்தியாவில் எத்தனை உயர் நீதிமன்றங்கள் உள்ளன?
   * 18

18. ஜப்பானின் அமைதிக்கான ''நிவானோ'' சமாதானப் பரிசைப்பெற்ற தமிழர் யார்?
   * டொக்டர் எம்.அறம் (இந்தியா)

19. வாண வேடிக்கையை முழுமையாகத் தடைசெய்துள்ள நாடு எது?
   * அவுஸ்திரேலியா

20. முட்டையிடும் காலத்தில் ஒரு நாளைக்குச் சுமார் ஆயிரம் முட்டையிடும் பூச்சி எது?
   * கறையான்

21. உலகில் வறுமை ஒழிப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
   * 1996

22. அவுஸ்திரேலியாவின் மொத்தப் பரப்பளவு எத்தனை சதுர கிலோமீற்றர்?
   * 77,13,000 ச.கி.மீற்றர்.

23. இந்தியாவின் மொத்தப் பரப்பளவு எத்தனை சதுரகிலோமீற்றர்?
   * 32,88,000 ச.கி.மீற்றர்.

24. மனித உடலின் மிகச் சிறிய தசை எது?
   * காதின் நடுவில் உள்ள தசை


25. வீனஸ் கிரகத்தில் எத்தகைய மழை பெய்வதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்?
   * கந்தக - அமில மழை

## அதி நவீன வாக்கி-டோக்கி




வாக்கி-டோக்கி என அழைக்கப்படும் சுற்றுப்புறத்தில் இருப்பவர்களிடம் பேசப்பயன்படும் கருவியை அதி நவீன முறையில் ஒரு சிகரெட் பெட்டியின் அளவில் ''டாக்கி ஏபொவுட்'' என அமெரிக்கா அறிமுகப்படுத்தியுள்ளது.

## மின்சார உற்பத்தியில் நவீன காற்றாலை



மனிதன் உயிர்வாழ உதவும் காற்றே அதிக அளவு மின்சாரமும் பெற உதவுகின்றது. காற்று மூலம் மின்சக்தி தயாரித்து சுற்றுப்புற சூழ்நிலையைப் பாதுகாப்பதில் ஜெர்மனி முதலிடத்தில் இருக்கின்றது.

வடக்கு கடலிலிருந்து ஆல்ப்ஸ் மலைவரை 12,800 காற்றாலைமின்சார, உற்பத்திநிலையங்களை அமைத்துள்ளது.

இதற்கு அடுத்து அமெரிக்கா, ஸ்பெயின், டென்மார்க், இந்தியா என உள்ளன.

கடலிலும் காற்றாலை மின்சாரம் தயாரிப்பதால் கப்பல்கள் படகுகள் முதலியவற்றுக்குக் கூட காற்றாலை மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

## சதுரங்கம்

சதுரங்கம் மிகப் பழமையான விளையாட்டு. அண்மையில் உஸ்பெக்கிஸ்தானில் கி.பி.200 இல் தயாரான சதுரங்கக் காய்கள் இரண்டைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

சதுரங்கம் தோன்றியது இந்தியாவில்தான் கரி, பரி, தேர், காலாள் என்று நான்கு வகையாக அமைந்த படையைச் சதுரங்க சேனை என்று கூறுவது வழக்கம். படையோடு படை மோதும் பாணியில் அமைந்த இந்த விளையாட்டுக்குப் பொருத்தமாகத்தான் சதுரங்கம் என்று பெயரிட்டிருக்கின்றார்கள்.

சதுரங்க விளையாட்டிலும் வீரன், மதகுரு, கோட்டை, காலாள் என்று நான்கு வகையான காய்கள் உண்டு.அரசனை நகர முடியாமல் பிடிப்பதுடன் சதுரங்க விளையாட்டு முடிவிற்கு வருகின்றது. அப்படிப் பிடித்த ஆட்டக்காரரே வென்றவர்.

அரசன் பிடிபடும் இந்த நிலையை ஆங்கிலத்தில் செக்மேட் (**Checkmate**) என்று சொல்வார்கள். இது ''ஷா மாத்'' எனும் பாரசீக சொற்றொடரின் திரிபு ஆகும். ஷாமாத் என்றால் மன்னர் மாண்டார் என்று பொருள்.

## பழங்காலத்தில் வாழ்ந்த தீக்கோழி போன்ற தீப்பல்லி

அமெரிக்க சிகாக்கோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் சீன மங்கோலியப் பிராந்தியத்தில் 16.5 கோடி ஆண்டு பழமைவாய்ந்த புராதன பல்லி எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது. டைனோசர் போன்ற அழிந்துபோன விலங்குகள் பற்றி ஆராய்ச்சியாளர்கள் அவ்வப்போது கண்டு பிடித்து வருகிறார்கள். இப்போது அமெரிக்க சிகாக்கோ பல்கலைக்கழகம் மற்றும் சீனா பஜிங்கில் உள்ள பெகிங் பல்கலைக்கழக ஆராய்ச்சியா ளர்கள் புதியவகை விலங்கு பற்றிக் கண்டுபிடித்துள்ளனர். ஆராய்ச்சியாளர்களால் சீன மங்கோலியப் பிராந்தியத்தில் 16.5 கோடி ஆண்டு பழமை வாய்ந்த புராதன பல்லி எலும் புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது. அந்தப் பல்லி தீக்கோழி மாதிரி தீப்பல்லி என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## செயற்கை மூளை தயார்

அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ்சிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மூளையின் ஒரு பகுதியைத் தயாரித்து இருக்கின்றனர். மனித உறுப்புக்கள் செயற்கையாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. செயற்கை இருதயம், செயற்கை நுரையீரல் எல்லாம் தயாராகி விட்டன. இப்போது செயற்கை மூளை தயாரிக்கப்பட்டுள்ளது. இது சிலிக்கான் சிப் கொண்டதாகும். நினைவாற்றல் அளிக்கும். இதை எலிக்குப் பொருத்தி சோதனை செய்து பார்த்தனர். இனி விலங்குகளுக்குப் பொருத்திப் பரிசோதிப்போம். அது வெற்றிபெற்றால் மனிதர்களுக்குப் பொருத்தலாம். பக்கவாதம், காக்கா வலிப்பு போன்ற வற்றால் மூளை பாதிக்கப்பட்டு நினைவாற்றல் இழப்பவர்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

## தோமஸ் அல்வா எடிசன்

ஒரு நாலு வயது குழந்தை. ஆசை ஆசையாய் அந்தக் குழந்தையை அலங்காரம் செய்து பள்ளிக்கூடம் அனுப்பினாள் அதன் அம்மா. அந்தக் குழந்தைக்கு கொஞ்சம் காது மந்தம். டாமி என்பது அதன் செல்லப் பெயர். மனம் நிறைய கனவுகளுடன் அந்தக் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பிய தாயாருக்கு நெஞ்சு நிறைய சோகங்களைப் பரிசளித்தார் ஓர் ஆசிரியை. மூன்று மாதங்கள் பள்ளிக்கூடம் சென்று வந்த குழந்தையின் சட்டைப் பையில் ஒரு காகிதத்தைத் திணித்து அனுப்பியிருந்தார் ஆசிரியை. படிப்பதற்கு லாயக்கற்ற முட்டாள் உங்கள் டாமி. இவனை இனிமேல் பள்ளிக்கு அனுப்பி தொந்தரவு செய்ய வேண்டாம் என்று அதில் எழுதியிருந்தது. குழந்தையை வாரி அணைத்துக் கொண்டு அந்தத் தாய் சொன்னாள் என் மகன் அறிவாளி. அவன் ஒன்றும் முட்டாள் அல்ல. அவனை நானே படிக்க வைப்பேன். அறிவாளியாக்குவேன் என்று ஆவேசமாக அறிவித்தாள். படிக்க லாயக்கில்லை என்று முத்திரை குத்தப்பட்ட அந்தப் பையனைப் பற்றி, அவன் கண்டு பிடிப்புக்கள் பற்றி இன்றைய பள்ளிக்கூடப் பிள்ளைகள் தினம் தினம் படித்துக் கொண்டே இருக்கின்றார்கள். அந்த முட்டாள் டாமிதான் பல்பை கண்டு பிடித்த தோமஸ் அல்வா எடிசன் பள்ளிக்கூடம் போகாத பையனைப் பற்றி பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமாக இன்று பாடம் நடக்கின்றது. இன்னொரு முக்கியமான விஷயம். அதே எடிசன் பத்தாயிரம் தடவை தோற்றுப்போன பின்னர்தான் வெடிக்காத பல்பைக் கண்டு பிடித்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா? தோல்வி ஒரு பெரிய விஷயமே அல்ல. நண்பர்களே எடிசனுடைய 67 ஆவது வயதில் அவருக்கு நேர்ந்த விபத்து தாங்கக் கூடியதே அல்ல. பாடுபட்டு அவர் உருவாக்கிய பல இலட்சம் பெறுமான அவரது ஆய்வு கூடம், தொழிற்சாலை பற்றி எரிந்தது. இஸ்சூரன்சு தொகையோ அதிகம் வராது. பற்றி எரியும் தொழிற்சாலைக் கூடத்தைப் பார்த்து எடிசன் சொன்னார் நல்லது, என் தவறுகள் யாவும் எரிந்துபோயின, என் பிழைகள் யாவும் கருகிவிட்டன. நல்லது இந்த அழிவிலும் ஒரு நன்மை இருக்கின்றது. கடவுளுக்கு நன்றி. இனி ஒரு புதிய தொடக்கம் உண்டு என்கிறார் அந்தப் பெருந்தகை. விபத்து நடந்த மூன்றாவது வாரத்தில் அவர் போனோக்கிராப் என்பதனைக் கண்டறிந்தார்.

## 350,000 ஆண்டு பழமையான கல்லறை கண்டுபிடிப்பு

ஸ்பெயின் நாட்டில் பாஹஸ் என்ற இடத்தில் 3,50,000 ஆண்டுகளுக்கு முந்திய கல்லறையைப் புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டுபிடித்து இருக்கின்றார்கள். 45 அடி ஆழமுள்ள அந்த கல்லறையில் 27 எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றோடு கல்லினால் செய்யப்பட்ட கைக்கோடரி ஒன்றும் இருந்தது.

# உலக புகைத்தல் தவிர்ப்பு நாள் மே-31

**அ. கலைவாணி**

உலகிலேயே அதிகளவு வாடிக்கையாளர்களைத் தன்னகத்தே கொண்ட விற்பனைப் பொருட்களில் புகையிலையும் அதிலிருந்து தயாராகும் சிகரெட் முதலிய பொருட்களும் தான். இவற்றின் மடியில் விட்டில்களாய் மரணத்தின் பிடியில் சிக்கிக் கொள்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கின்றது என உலக சுகாதார நிறுவனம் கவலையடைகின்றது.



அதனால் "புகை உயிருக்குப் பகை" என்று கூறுவதில் தப்பில்லைத்தானே... புகைப்பவர்கள் தங்களையும், தங்களைச் சார்ந்தவர்களையும் மரணத்தின் வாசலுக்கு மிக இலகுவாக கூட்டிச் செல்கின்றனர்.

இதனால்தான் புகைத்தல் பழக்கத்திற்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்டெடுக்கும் முகமாகவும், புகைத்தலால் ஏற்படும் பாதிப்புக்களை, அரசாங்கம், சமூகம், தனிப்பட்டவர்கள்.... என அனைவரும் இணைந்து அக்கறை கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனும் அடிப்படை நோக்கத்துடன், உலக சுகாதார நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 31 ஆம் திகதியை அதாவது, இன்றைய நாளை புகைத்தல் தவிர்ப்பு தினமாக பிரகடனப் படுத்தியுள்ளது.

உலகளாவிய ரீதியில் வருடந்தோறும் 200-300 மில்லியன் பேர் கொடிய புகைப் பிடிக்கும் பழக்கத்தால் மரணத்தை தழுவிக் கொள்வதாக, உலக சுகாதார நிறுவன அறிக்கை கூறுகின்றது.

இன்று உலகம் முழுவதும் 110 கோடி மக்கள் புகைப் பிடிப்பதில் அதீத ஆர்வம் காட்டுவதாகக்கூறும்உலக சுகாதார நிறுவனம் ஆண்டொன்றுக்கு 40 இலட்சம் பேர் பலியாவதால் 2030 ஆம் ஆண்டாகும் போது 300 இலட்சம் பேர் மரணத்தைத் தழுவ நேரிடும் என எதிர்வு கூறியுள்ளது.

அப்படி புகைத்தலில் என்னதான் இருக்கின்றது... புகையிலையில் 'நிக்கோட்டீன்' நஞ்சு இருக்கின்றது. இந்த நஞ்சுடன் 700 வகையான கூட்டுப் பொருட்கள் (கன உலோகம், கிருமிநாசினி, பூச்சி கொல்லி) கொண்டே சிகரெட் முதலியன தயாரிக்கப்படுகின்றது.

அதாவது, குழிதோண்டி புதைக்க வேண்டியவை அனைத்தையும் புகையூடாக உறிஞ்சும் மனிதன், தனக்குத் தானே குழி தோண்டிக் கொள்கின்றான் எனலாம்.

அது மட்டுமா... வெளியேறும் புகை என்ன சாதாரணமானதா.... அதில் அசிடோன், கார்பன் மோனாக்சைட், ஆர்ஸனிக், பியூட்டேன், சையலினட்,.... என 400 வகையான நச்சுப் பொருட்கள் உள்ளதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

புகைத்தலின்போது புகையிலையில் உள்ள "நிக்கோட்டீன்" விரைந்து குருதியின் வழிச் சென்று புகைப்பிடிப்பவர்க்கு இச்சை உணர்வை உண்டாக்குவதுடன், முதலில் உடலுக்கு உற்சாகத்தை வழங்கி, சிறிது சிறிதாக மூளையின் செயற்பாட்டைக் குறைக்கின்றது.

அத்துடன் நிக்கோட்டீன் குருதியை கட்டியாக்கும் தன்மையும் கொண்டது. புகையிலையிலுள்ள காபனோரொட்சைட் புகைப்பவர்களுக்குத் தெரியாமலே உடலைச் சென்றடைந்து குருதியில் காணப்படும் ஒட்சிசன் அளவை 15%ஆல் குறைக்கின்றது.

புகைத்தலினால் புகைப்பவர்களுக்கும் புகையை சுவாசிப்பவர்களும் 90%மாக நுரையீரல் புற்று நோயும் ஏனையமார்புப் புற்றுநோய், இதய நோய், காது கேளாமை, நீரழிவு அபாயம், மனச்சோர்வு, குடற்புண், சுவாசக் கோளாறு,மலட்டுத்தன்மை,எலும்புருக்கி நோய், பற்சிதைவு, நிறக்குருடு, தற்கொலை எண்ணம்.... என 20 - 25 வகையான நோய்கள் பீடிக்கும் அபாயமும் அதிகம்.

உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் 43% ஆண்கள், 23% பெண்கள் புகைப் பதில் பிரியர்களாக உள்ளனர்.

இவர்களிற்குப்பிறக்கும் மழலைகள் இறந்து பிறக்க வாய்ப்புண்டு. அத்தோடு உடல், உள ஊனமுடையவர்கள் பிறக்கவும் வாய்ப்புண்டு.

சீனா தான் உலகில் புகையிலை ஏற்றுமதியிலும், புகைத்தலிலும் முதலிடம் வகிக்கின்றது.

இங்கு புகையிலை சார் வருமானம் 490 கோடி அமெரிக்க டொலராகவும், சுகாதார சேவைக்கு மட்டும் 780 கோடி அமெரிக்க டொலரையும் அது செலிவிடுகின்றது.

அதேபோல் அமெரிக்காவில் வருடந்தோறும் 40,000 பேர் புகைத்தலினால் மடிகின்றனர் என்பதுடன் 2000 கோடி அமெரிக்க டொலர்களைப் புகைப்பிடிக்கும் பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் செலவிடுகின்றது.

அதேபோல் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் 50 சதவீத ஆண்களும் 07 சதவீத பெண்களும் புகைத்தலினால் சந்தோஷமடைகின்றனர். இந்நாடுகளில் நிமிடத்திற்கு 6 பேர் மாண்டு போகின்றார்கள் என உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

இந்தியா புகைத்தலில் மூன்றாம் இடத்தில் உள்ளது. இங்கு தரக்குறைவான புகையிலை உற்பத்திகள் அதிகம்.

அத்துடன் பம்பாய் போன்ற நகரங்களில் "சூட்டா புகைப்பிடித்தல்" எனும் முறை காணப்படுகின்றது. இந்த முறையில் பில்டர் உள்ள பக்கத்தை வாயில் வைத்து புகையை உள்ளெடுப்பதற்குப் பதிலாக தீ வைக்கப்பட்ட பக்கத்தில் வாயின் உட்புறமாக தீ வாயைச் சுடாதவாறு வைத்துபுகை உள்ளெடுக்கப்படும். இந்த வகைப் புகைத்தல் சாதாரண புகைத்தலின் விளைவுகளின் இரட்டிப்புத் தாக்கத்தை ஏற் படுத்துகின்றது.

இலங்கையில் வருடாந்தம் 20ஆயிரம் பேர் புகைத்தலினால் மரணத்தை தழுவிக் கொள்வதாகவும், அரசு வருடாந்தம் 1930 கோடி ரூபா சுகாதார சேவைக்குச்செலவிடுவதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கை போன்ற சில நாடுகளில் பெண்கள் புகைப்பது என்பது குறைவு. அருகில் இருப்பவர்கள் புகைப்பதால் தான் இவர்களும் நோய்களுக்கு ஆளாகின்றனர் எனலாம்.

சவுதி அரேபியாவில் புதுமையான சட்டம் ஒன்று இருக்கின்றது. சிகரெட் லைட்டர், சிகரெட் பெட்டி போன்ற பொருட்களை யாரும் யாருக்கும் அன்பளிப்பாகக்கொடுக்கக் கூடாது. கொடுத்தால் அது தண்டனைக்குரியது. உடல் நலத்தைக் கெடுக்கும் இந்தப் பொருட்களை அதிகம் பயன்படுத்தாமல் இருக்கவே இப்படி ஒரு சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அதேபோல் தைவான் நாட்டைச் சேர்ந்த "வான்சங்" எனும் ஆய்வாளர் கண்டு பிடித்துள்ள சிகரெட் சாம்பல் சேகரிக்கும் தட்டு (**Ashtray**) சிகரெட் சாம்பலைத் தட்டியவுடன் பலமாக இருமல் ஒலியைக் கிளப்பி சிகரெட்டால் ஏற்படும் ஆபத்தை எச்சரிக்கின்றது.

இவ்வாறு நாட்டுக்கு நாடு, புகைத்தலை ஒழிக்க ஏதோ ஓர் நடவடிக்கையை செயற்படுத்தினாலும் ஏனோ புகைத்தலுக்கு ஆட்படுவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் இருப்பதாகவும், புகைத்தல் எதிர்ப்பு தினம் கொண்டாடுகின்ற போதிலும் புகைத்தல் விகிதம் நூற்றுக்கு ஐம்பது வீதம் என்றளவில் கூடக்குறையவில்லை என உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

புகைத்தலை நாகரிகமாகக் கருதும் இளம் சந்ததியினர் ஒரு நாளைக்குக்குறைந்தது 10 சிகரெட் என்றாலும் ஊதித் தள்ளுகின்றனர். ஒரு நாள் 100ரூபாவிற்கு புகைத்தால் ஆண்டொன்றிற்கு 36500ரூபா செலவு செய்து வாழ் நாளின் எண்ணிக்கையைக் குறைத்து மரணத்தை தான் பிரதி பலனாக பெற்றுக் கொள்வதை ஏனோ புரிந்துகொள்ள மறுக்கின்றனர்.

எனவே புகைத்தல் என்பது "மரணத்திற்கான மிக இலகுவான அழைப்பு", "தற்கொலைக்கான தன்னிச்சையான முயற்சி" என்பதை மனதில் நிறுத்தி, இன்றைய திகதியிலிருந்து புகைத்தலைக் கைவிட்டு, மருத்துவரைநாடுவதன் மூலம் வீட்டிற்கும், நாட்டிற்கும் நன்றே செய்வோமாக அதை இன்றே செயற்படுத்துவோமாக. □

## சூழல் சுடர்




# பொன் முட்டை இடும் வாத்து

தாவரங்கள் இந்த உலகின் உயிர்கள் நடமாட செய்துவரும் சேவையை வேறு எவரும் செய்வதற்கில்லை. ஆம்! நாம் உயிரை வைத்துக்கொண்டிருக்கத் தேவையான உயிர்வளியின் உற்பத்திகளே தாவரங்கள் தாமே. இது மட்டுமல்ல, தாவரங்கள் பல வழிகளிலும் நமக்கு பயன்படுகின்றன. உணவு, உடை, உறைவிடம் இன்னும் பலவற்றைத் தாவரங்கள் கொடுக்கின்றன. ஒரு பெரியமரம் 50 ஆண்டுகள் உயிரோடு இருந்தால், மனிதன் சமுதாயத்திற்கு செய்வதைவிட அதிக சேவையைச் செய்கிறது. இது கல்கத்தாவிலுள்ள வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானி டாக்டர் எம்.டி. தாஸ் தெரிவித்துள்ள கருத்து. அவர் தந்த தகவலின் விபரங்கள்: பத்து குளிர்சாதனக் கருவிகள் தொடர்ந்து இயங்குவதால் கிடைக்கும் குளிர்ச்சியினை ஒரு தனி மரத்தின் நிழல் கொடுக்கிறது. காற்று தருகிறது. ஒரு ஏக்கரில் வளர்ந்த மரங்கள், ஓராண்டிற்கு பதினெட்டுப் பேர்களுக்குத் தேவையான ஆட்சிஜனைத் தருகின்றன. 50 வயதுள்ள மரம் தனது ஓராண்டு வாழ்நாளில் மனிதனின் உபயோகத்திற்குத் தரும் நுகர் பொருட்களை பொருளாதார பண மதிப்பீட்டில் கணக்கிட்டால் ஏறக்குறைய 16 இலட்சம் ரூபாயாகும். ஓ! அம்மாடி! ஒரு சராசரி மனிதனால் ஒரு வருடத்தில் அவ்வளவு சம்பாதிக்க முடியாதே! எப்படி?

ஆட்சிஜன் உற்பத்தி ரூ. 2.5 இலட்சம்
காற்றைச் சுத்தப்படுத்தல் ரூ. 5.0 இலட்சம்
பூமியின் மனிச்சந்தை குறையாமல் காத்தல் ரூ. 3.0 இலட்சம்
காற்றின் ஈரப்பதத்தைக் காத்தல் ரூ. 3.0 இலட்சம்
பறவை விலங்குகட்கு உறைவிடம் ரூ. 2.5 இலட்சம்
உணவு தருதல் மற்றும் நிழல்தருதல் ரூ. 0.2 இலட்சம்
பூக்களின் மதிப்பு (வாசனை மற்றும் தேன்) ரூ. 0.2 இலட்சம்
மொத்த மதிப்பு ரூ. 15.9 இலட்சம்
அப்படியானால் மரம் ஒரு பொன் முட்டையிடும் வாத்துத் தானே!

ஆக்கம்: **மோகனா. பழனி.**

# தாவரத்திலிருந்து உப்பு

# இந்திய விஞ்ஞானிகள் சாதனை

தாவரத்திலிருந்த உப்புத் தயாரித்து இந்திய விஞ்ஞானிகள் சாதனை புரிந்துள்ளனர்.

குஜராத் மாநிலம் பான்நகரில் உள்ள மத்திய உப்பு மற்றும் கடல் சார் இரசாயன ஆராய்ச்சிக் கழக விஞ்ஞானிகள் இச்சாதனையைப் புரிந்துள்ளனர்.

தாவரத்திலிருந்து உப்புத் தயாரிக்கப்படுவது இதுவே முதல்முறை. கடல் நீரில் இருந்து தயாரிக்கப்படும் உப்புத்தான் உலகம் முழுவதும் தற்போது பயன்படுத்தபட்டு வரு கின்றது.

தாவர உப்பிற்கு 'சலோனி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதில் கடல் நீரிலிருந்து எடுக்கப்படும் உப்பிலுள்ள சத்துக்கள் அனைத்தும் உள்ளன.

இந்த உப்பிற்கு சந்தையில் எந்தளவிற்கு வரவேற்பு இருக்கும் என்பதை அறிய வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மாதிரியும் அனுப்பப்பட்டுள்ளது.

பெரும்பாலான தாவரங்கள் உப்பு நீரில் வளராது. ஆனால் சில தாவரங்கள் உப்பு நீரில்தான் வளரும். எனவே உப்பு நீரை நன்றாக உறிஞ்சி வளரும்.'சாலி கார்னியா பிராசைதா' என்ற அச்செடியை குஜராத் கடலோரப் பகுதியில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இச்செடிக்கு இலைகள் இல்லை. மாறாக முட்கள் நிறைந்து காணப்படுகின்றன.

இது தண்ணீரில் உள்ள உப்பை தன் திசுக்களில் சேர்த்து வைத்துக் கொள்கின்றது என்பதை விஞ்ஞானி கள் கண்டு பிடித்துள்ளனர்.

பின்னர் அச்செடியை எடுத்து வந்து அதிலிருந்து உப்பைத் தனியே பிரித்தெடுக்கின்றனர்.

கடலில் இருந்து எடுக்கப்படும் உப்பில் சோடியம் குளோரைட் அதிக அளவில் இருக்கும். ஆனால் இச்செடியிலிருந்து எடுக்கப்படும் உப்பில் பொட்டாசியம், கல்சியம், மக்னீசியம், இரும்புச்சத்து நிறைந்த மைக்கோ நியூட்ரியட்டுகளும் உள்ளன.

தாவரத்திலிருந்து எடுக்கப்படுவதால் இந்த உப்பு கையில் ஒட்டா மல் இருப்பதற்கு இரசாயனம் எதையும் பயன்படுத்தத் தேவையில்லை.

உப்புச் சத்து நிறைந்த மண் வளத்தைப் பெருக்குவதற்காக "சாலிகோனியா" எனும் செடியை அதிக பரப்பளவில் வளர்க்கவுள்ளதாக ஆராய்ச்சிக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் ஜே.பி. பாண்டியா கூறியுள்ளார்.

இச்செடியின் விதையிலிருந்து 25-35 சதவீதம் வரை உணவு எண்ணெய் உள்ளது. எனவே அதனை எடுப்பதற்கான முயற்சியில் ஆராய்ச்சிக் கழகம் ஈடுபட்டுள்ளது.

# உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு – கிழக்கு மாகாணசபை

## வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

### 'ஆஅவ' கடன் இல. 1846 - SRI (SF)

### யாழ். மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல: 02

01. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக் கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருநராக குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளை தற்போது கோருகின்றார்.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | ஜேஎவ் / நிகொட் / ஈடீ / 01 | சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரியில் 110' x 25' அளவுடைய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் அமைத்தல். | M7 | 47,000 |
| 02. | ஜேஎவ் / நிகொட் / ஈடீ / 04 | ஆழியவளை சி.சி.த.க. பாடசாலையில் 110' x 25' அளவுடைய மூன்று வகுப்பறைக் கட்டடங்கள் மீளமைத்தல், வகுப்பறைக் கட்டடங்கள் புனரமைத்தல். | M7 | 49,000 |
| 03. | ஜேஎவ் / நிகொட் / ஈடீ / 06 | வடமராட்சி கிழக்கு - தாளையடி றோ.க.த.க. பாடசாலையில் 110' x 25' அளவுடைய வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல், அதிபர் அலுவலகம் கொண்ட ஒரு கட்டடம் புனரமைத்தல். | M8 | 23,000 |
| 04. | ஜேஎவ் / நிகொட் / ஈடீ / 08ஏ | தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் 130' x 25' அளவுடைய வகுப்பறை மாடிக்கட்டடம் அமைத்தல். | M6 | 56,000 |
| 05. | ஜேஎவ் / நிகொட் / ஈடீ / 12 | பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் பாடசாலையில் 130' x 25' இரண்டுமாடி கொண்ட கட்டடம் மீளமைத்தல். | M6 | 55,000 |
| 06. | ஜேஎவ் / நிகொட் / ஈடீ / 13ஏ | பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 130' x 25' இரண்டுமாடி வகுப்பறைக் கட்டடம் அமைத்தல். | M7 | 43,000 |
| 07. | ஜேஎவ் / நிகொட் /ஈடீ / 13பி | பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 60' x 30' நூலகம் மீளமைத்தல். | M8 | 20,000 |
| 08. | ஜேஎவ் / நிகொட் / ஈடீ / 17 | காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் 120' x 25' அளவுடைய இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல். | M6 | 56,000 |
| 09. | ஜேஎவ் / நிகொட் / ஈடீ / 18 | காரைநகர் மெய்கண்டான் தமிழ் வித்தியாலயத்தில் 80' x 20' அளவுடைய வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தலும், மூன்று வகுப்பறைக் கட்டடங்கள் திருத்துதலும். | M8 | 12,000 |
| 10. | ஜேஎவ் / நிகொட் / ஈடீ / 19 | அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் 110' x 25' அளவுடைய இரண்டு மாடிக்கட்டடம் மீளமைத்தலும், கட்டடங்கள் திருத்துதலும். | M7 | 41,000 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ('இக்டாட்' டுடன் M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

IV. 'இக்டாட்' வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு, ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோர முடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர், மேலதிக விபரங்களை மாவட்ட பிரதி கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி : 021 - 222 3625

தொலைநகல் : 021 - 222 5163

06. ஒப்பந்த ஆவணங்கள் மே 30 இலிருந்து ஜூன் 13 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமான ரூபா 1000 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி, மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

08. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப்பிணை முறிகளுடன், பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்ட கேள்விச்சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்" த்திற்கு ஜூன் 20ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு முன்பாக கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. ஒப்பந்தகாரருக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று, கச்சேரியில் ஜூன் 10ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்குத் அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**செ. பத்மநாதன்**
**தலைவர், மாவட்ட கேள்விச்சபை,**
**யாழ். மாவட்டம்.**

(சி- 7932)

## சிந்தனைக்கு



இந்த உலகில் அநீதியும் -அடிமைத்தனமும் இருக்கும்வரை, சுதந்திரத்தை இழந்துவாழும் மக்கள் இருக்கும்வரை விடுதலைப் போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்கமுடியாத வரலாற்று நியதி.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM
யூரழ். சாலை, கிளிநொச்சி. 31-05-2003

## விலகிச் செல்லும் பிரதமர் ரணில்

சமாதான முயற்சிகளில் இருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விலகிச்செல்லத் தொடங்கியுள்ளார் என்பதை வெளிக்காட்டும் ஒன்றாக விடுதலைப் புலிகளின் அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்த கோரிக்கைக்குப் பதிலாக அவர் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள பிரேரணைகள் உள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இத்தகைய பதிலுக்கு காரணம் எதுவாக இருப்பினும்– அதாவது, அரசியல் யாப்போ அன்றி அரசியல் பலவீனங்களோ, அழுத்தங்களோ எது காரணமாக இருப்பினும், சமாதான முயற்சிகளுக்கு ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள பிரேரணைகள் உந்து சக்தியாகவோ அன்றி சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளைப் போக்குவதற்குரியதொன்றாகவோ இருக்கப்போவதில்லை.

அது மாத்திரமல்ல, இதுவரையில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் – அவற்றில் காணப்பட்ட இணக்கப்பாடுகள் என்பனவற்றையும் கேள்விக்குரியவையாக்கியுள்ளன. ஏனெனில், ரணில் விக்கிரமசிங்கவின் பிரேரணைகள் முன்னேற்றகரமானவையாகவோ – நம்பிக்கைகளை வளர்க்கக் கூடியவையாகவோ இல்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் தேவை குறித்த தமது நிலைப்பாட்டை தெளிவாகவே அரசாங்கத்திடம் முன்வைத்திருக்கின்றது. சிரான் அமைப்பு செயற்பட முடியாததொரு நிலையில் வடக்கு – கிழக்குப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள இவ் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் அவசியம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய பிரேரணையில் அதிகாரங்களுடன் கூடிய; இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்ற இரண்டு விடயங்களுமே புறந்தள்ளப்பட்டவையாகவுள்ளன. அதிலும் குறிப்பாக, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்ற வார்த்தைப் பிரயோகமே ஆட்சியாளர்களுக்கு விருப்பற்றதொன்றாக இருப்பதுபோல் தெரிகின்றது.

ஏனெனில், பிரதமர் தனது பிரேரணையில் இவ் இடைக்கால நிர்வாக சபைக்கட்டமைப்பு என்ற பதத்தையே தவிர்த்துக் கொண்டுள்ளார். இதனை வேறொரு விதத்தில் பார்த்தால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்குப் பதில் அளிக்காது தவிர்த்துக் கொண்டுள்ளார் எனறு கூடக் கொள்ளலாம். இதனை அவர் சிறப்பானதொரு இராஜதந்திர செயற்பாடு எனச் சில வேளைகளில் கருதிக் கொள்ளக்கூடும். ஆனால், அது சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்திற்கு உதவப் போவதில்லை.

அடுத்ததாக விடுதலைப்புலிகள் எதிர்பார்த்த அதிக அதிகாரங்கள் கொண்டதானதொரு சபைகூட இங்கு முன்மொழியப்படவில்லை. மாறாக ஏற்கனவே, பேச்சுவார்த்தையின் மூலம் உருவாக்கப்பட்ட 'சிரான்' அமைப்பின் பணிகளை முற்றிலுமாகவே கேள்விக்குரியதொன்றாக்கியுள்ளது. அதாவது, சட்டச் சிக்கல்களினால் நெருக்கடிக்குள்ளாகியுள்ள சிரானின் செயற்பாடுகள் இதன் மூலம் முற்றிலுமாக முடக்கப்படும் ஒன்றாகியுள்ளது.

இவை ஒருபுறம் இருக்க, இப்புதிய பிரேரணைகளில் விடுதலைப் புலிகளின் பங்கு, அதாவது, அங்கத்துவம் என்பது குறித்து தெளிவான குறிப்புகள் எதையும் அரசாங்கம் தெரிவிக்காததோடு, இவ்விடயத்தைக் குழப்பத்திற்கு உள்ளாக்கும் வகையிலும் வார்த்தைகளைப் பிரயோகித்துள்ளது. அதாவது, புலிகளின் பிரதிநிதித்துவம் குறித்து உறுதிபடத் தெரிவிக்காத இப்பிரேரணை வடக்கு – கிழக்கில் வாழும் இனக்குழுமங்களை உண்மையில் பிரதிநிதித்துவப்படுத்துவதைப் பிரதிபலிக்கும் விதத்தில் எல்லா இனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக அமையும் எனத் தெரிவிக்கின்றது.

இது மட்டுமல்ல, பிரதமரின் இப்பிரேரணைகள் ஏற்கனவே தமிழ் மக்களினாலும், விடுதலைப்புலிகளினாலும் ஏற்றுக் கொள்ளப்படாத – நிராகரிக்கப்பட்ட சிறிலங்கா அரசியல் யாப்பிற்கு உட்பட்ட விதத்திலேயே முன்வைக்கப்பட்டதொன்றாகவும் உள்ளது. அதாவது, சிறிலங்கா அரசியல் யாப்பின் ஒற்றையாட்சி வரம்புகளுக்கு உட்பட்ட விதத்தில், இப்பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் பார்க்கையில், இப்பிரேரணைகள், வடக்கு – கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பிற்கான இடைக்கால நிர்வாகசபை, அதற்கான அதிகளவு அதிகாரங்கள் புலிகளின் பிரதிநிதித்துவம், நிர்வாகத்தில் அவர்களின் பங்கு என எதையுமே கொண்டதாக இல்லாதது மட்டுமல்ல, இதுவரையிலான பேச்சுவார்த்தைகள், கருத்துப்பரிமாற்றங்கள் என்பனவற்றையும் அர்த்தமற்றவையாக்கி, ஒற்றையாட்சி அமைப்பிற்குள் நின்று கொண்டுள்ளது. ஆனால், இடைக்கால நிர்வாக சபை / கட்டமைப்பு என்ற சொற்றொடரையே பயன்படுத்தாத பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இறுதி உடன்படிக்கை பற்றியும், சமஷ்டி தீர்வு குறித்தும் பேசியிருப்பது 'கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவது' பற்றிப் பேசுவது போன்றுள்ளது.

### - உயர்நீதிமன்றத் தீர்ப்பால் -
# 3-மாகாண முதலமைச்சர்களின் பதவி குறித்து கேள்விக்குறி

(கொழும்பு)

சிறிலங்கா உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைத் தொடர்ந்து மூன்று பொதுசன ஐக்கிய முன்னணி மாகாணசபை முதலமைச்சர்களின் பதவி சட்டபூர்வமாக கேள்விக் குறியாகியுள்ளது.

உள்ளூராட்சிச் சபைகளில் ஏற்படும் பதவி வெற்றிடங்கள் எவையும் தேர்தல் காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவிலுள்ளவர்களைத் தவிர வேறெவராலும் நிரப்பப்படக்கூடாது என உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதனால் தெற்கு, வடமத்திய மேல் மாகாணசபைகளின் முதலமைச்சர்களின் நிலை குறித்து கேள்வியெழுந்துள்ளது. இம்மாகாணங்களின் முதலமைச்சர்களான எச்.ஜி.சிறிசேன, பேர்ட்டி பிரேம்லால் திசநாயக்க, றெஜினோல்ட் கூரே ஆகியோரின் பெயர்கள் நியமனப் பத்திரங்களில் இடம்பெற்றிருக்கவில்லை.

ஊவாமாகாண முதலமைச்சர் சமரவீர வீரவன்னியின் பெயர் நியமனப் பத்திரத்தில் இடம்பெற்றிருக்காததால் அவரது நியமனம் செல்லுபடியாகாது என உயர் நீதிமன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதனால் பொதுசன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. ஆகியவற்றின் மாகாணசபை உறுப்பினர்கள் பலரதும் நிலை கேள்விக்குள்ளாகியுள்ளது. குறிப்பாக ஜே.வி.பி. முற்று முழுதாக நியமனப்பத்திரத்திற்கு வெளியிலிருந்தே உறுப்பினர்களை நியமித்து வருகிறது.

# டோக்கியோ மாநாட்டைத் தொடர்ந்து முதலீட்டாளர்களுக்கு கருத்தரங்கு
### - அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

டோக்கியோ மாநாட்டைத் தொடர்ந்து முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கொன்று நடைபெறும் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 16 ஆம் திகதி ஜப்பானில் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கில் ஜப்பான் முதலீட்டாளர் கழகம், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டச் சபை, உலக வங்கி ஆகியன ஒருங்கிணைந்துள்ளன.

இக் கருத்தரங்கில் 35 நாடுகளின் பிரதிநிதிகளும் 20 பிற முதலீட்டாளர்களும் கலந்து கொள்வார்கள் என்று ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் தலைமையுடன் பேச சனாதிபதி சந்திரிகா தயாராம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயாராக இருப்பதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பலாலி பிரதேசம் தவிர வடக்கின் ஏனைய அதிபாதுகாப்பு வலயங்களில் தமிழ் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக தாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடும் பொருட்டு சனாதிபதி சந்திரிகாவை இந்துகலாச்சார அமைச்சர் ரி.மகேஸ்வரன் சந்தித்த வேளையே அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார். சிறைச்சாலைகளிலுள்ள விடுதலைப் புலிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுப்பதற்குவிருப்பம்கொண்டுள்ளதாக சனாதிபதி தெரிவித்துள்ளார். இந்தச் சந்திப்புகடந்தசெவ்வாயன்று இடம் பெற்றது.

# தென்னாபிரிக்கா, அயர்லாந்து பிரதிநிதிகளுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சந்திப்பு

(கொழும்பு)

தென்னாபிரிக்கா மற்றும் வட அயர்லாந்து பிரதிநிதிகளை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது தமது நாட்டு சமாதான முயற்சிகள் குறித்து தென்னாபிரிக்க மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் டினோன் இர்தீன் மற்றும் அயர்லாந்துப் பிரதிநிதியான டேவிற் ஆகியோர் தமிழ் தேசிய கூட்டமைப்பினருடன் கலந்து கொண்டு உரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈ.பி.ஆர்.எல்,எவ். அமைப்பின் செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விக்ரோறியா அணைக்கட்டை பார்வையிட மீண்டும் அனுமதி

(கொழும்பு)


விக்ரோறியா அணைக்கட்டும், பார்வையிடும் நிலையமும் நாளை முதல் மக்களின் பார்வைக்கு மீண்டும் திறக்கப்படவுள்ளதாக சிறிலங்கா நீர்வள அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த அணைக்கட்டு பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டிருந்தது. எனினும் அணைக்கட்டைப்பார்வையிட விரும்புவோர் 10 நாட்களுக்கு முன் மகாவலி அதிகார சபையின் செயலாளரின் எழுத்து மூலமான அனுமதியைப் பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# றஞ்சித்தின் கொலையாளிகளுக்கு கம்பஹா எம்.பி. பாதுகாப்பு

தென்மாகாண சபை அமைச்சர் றஞ்சித்தை கொலை செய்த சந்தேக நபர்கள் கம்பஹா மாவட்ட ஐ.தே.க. எம்.பி. ஒருவரின் பாதுகாப்புடன் தலைமறைவாகி இருப்பதாகப் பொலிசார் தெரிவிக்கிறனர்.

இவ்வரசியல்வாதி அண்மைக் காலங்களில் நடைபெற்ற வன்முறைகளோடு தொடர்புபட்டிருப்பதாகவும் கூறும் பொலிசார் இந்தப் பாதாள உலகக் கோஷ்டியினர் இக்கொலை நடைபெறமுன் நுவரெலியா எம்.பி. ஒருவரின் பாதுகாப்பில் இருந்த தாகவும் தற்போது கம்பஹா மாவட்ட எம்.பி.யின் உதவியுடன் ஒழிந்து திரிவதாகவும், எப்படியானவரின் பாதுகாப்பில் அவர்கள் இருந்தாலும் விரைவில் கைது செய்யப்படுவர் எனக் கூறியுள்ளனர்.




# ஆசிய கிராண்ட்ப்ரீ விளையாட்டுப் போட்டி; சுசந்திகா, பிரதீபகுமாரவுக்கு தங்கம்

ஆசிய கிராண்ட்ப்ரீ விளையாட்டுப் போட்டியில் இந்தியாவில் நடைபெற்ற முதல்கட்டப் போட்டியில் சிறிலங்கா வீரர்கள் சுசந்திகா ஜெயசிங்கவும், ரொகான் பிரதீப்குமாரும் தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர்.

முதல் தடவையாக நான்கு நாடுகளில் நடைபெறும் இப்போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெறுவோருக்கு மூவாயிரம் அமெரிக்கடொலர்களும், வெள்ளிப்பதக்கம் பெறுவோருக்கு ஆயிரத்து முந்நூற்றைம்பது டொலர்களும், வெண்கலப்பதக்கம் பெறுவோருக்கு ஐந்நூறு டொலர்களும் வழங்கப்படுகின்றன.

இதன்படி சுசந்திகாவும் ரொகான்பிரதீப்பும் இலங்கை நாணயத்தில் ஆறுலட்சம் ரூபாவினையும் வெள்ளிப்பதக்கம் வென்றதமை யந்திதர்சாவும், சிலான்குணவன்ச, குமாரடிசில்வா,திலகரட்ண ஆகியோர் தலா ஒருலட்சத்து 25 ஆயிரம் ரூபாவையும் பெற்றுள்ளனர்.இரண்டாவது சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளும் பொருட்டு அவர்கள் நேற்று சிறிலங்கா திரும்பியுள்ளனர்.

# 6ஆவது முறையாக மிலன் அணி வெற்றி

இங்கிலாந்தில் மௌன்ஸ் சூரியில் நடைபெற்ற ஐரோப்பிய கால்பந்து சம்பியன் பட்டத்தை ஏ.சி.மிலன் அணி ஆறாவது முறையாகவும் வென்று சாதனை படைத்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மிகவும் பரபரப்பான ஆட்டத்தில் ஏ.சி.மிலன் அணி, தனக்கெதிராக விளையாடிய இத்தாலி அணியை 3:2 என்னும் கோல் கணக்கில் வென்று கோப்பையைக் கைப்பற்றியது.

# சமன் மீன் உண்ணும் தேசத்தவர் என நோர்வே மீது பொ.ஐ.மு.சாடல்

சமாதானப் பேச்சுக்களில் நடுநிலையாளராக செயற்பட்டுவரும் நோர்வே அரசை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பேச்சாளர் மங்கள சமரவீர கடுமையாக சாடிய துடன் சமன் மீன் உண்ணும் தேசத் தவர்கள் எனவும் நோர்வேயை விபரித்துள்ளார்.

சிறிலங்கா சனாதிபதியின் அழைப்பின் பேரில் விடுதலைப் புலிகளுடன் சமாதானம் ஏற்படுத்த நோர்வே நாடு முயன்று வருகிறது. அண்மையில் ஜப்பானுக்கு விஜயம்செய்த நோர்வே நாட்டு பிரதமர் இலங்கை சமாதான வழி முறைகளில் சனாதிபதியின் கட்சி முழுமனதுடன் ஈடுபடவில்லை என்று கூறியதையடுத்து நோர்வே நாட்டின் மீது மேற்படி கண்டனம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும் நோர்வே மன்னருக்கும் முறைப்படியான எதிர்ப்பு ஒன்றும் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். சமன் மீன் உண்ணும் தேசம் சர்வதேச அளவில் பல விவகாரங்களில் ஈடுபடுத்திக் கொள்ளும் நாடு என நோர்வே நாட்டை அவர் விபரித்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.



# சிறில.வுக்கு சர்வதேச உதவிகளை ஜப்பான் - சிறில.கூட்டாகக் கோரும்

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளுக்கு உதவுமாறு சர்வதேச சமூகத்தையும் உதவி வழங்கும் அமைப்புக்களையும் கோருவதற்கு சிறிலங்காவும் ஜப்பானும் தீர்மானித்துள்ளன.

இந்தக் கோரிக்கையை இரு நாடுகளும் கூட்டாகவிடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கான கடிதத்தில் சிறிலங்கா அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் ஜப்பானிய அரசாங்கத்தின் சார்பில் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஜெரிக்கோ கவாருச்சியும் கைச்சாத்திடவுள்ளனர்.

இதேவேளை வடக்கு - கிழக்கு உட்பட இலங்கையின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைக ளுக்கு ஜப்பானிய அரசாங்கம் இம் முறை பெருமளவு நிதியை வழங்க வுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் அபிவிருத்தி மற்றும் புனரமைப் பிற்கான உதவிகளை வழங்கும் மூன்றாண்டுத்திட்டம் ஒன்றையும் ஜப்பான் விடுத்துள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

# - மன்னார் மாவட்டத்தில் - சுகாதார மருத்துவசேவைகள் மேம்படுத்தல் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

மன்னார் மாவட்ட சுகாதார மருத் துவ சேவைகள் மேம்பாடு தொடர் பான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் தமிழீழ சுகா தார சேவைகள் பணிப்பாளர் அருண் தலைமையில் நடைபெற்ற இக்கலந் துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர், மன்னார் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், தமிழர் நல.அபிவி ருத்தி நிறுவனத்தின் லண்டன் நாட்டு இணைப்பாளர் திருமதி.சி.சியாமளா, தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த பிரதிநிதி, வெள்ளாங்குளம் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் தர்மலிங்கம் கலந்து கொண்டனர் இந்நிகழ்வில்,

போரினால் பாதிக்கப்பட்ட பகுதி களில் சுகாதார, மருத்துவ சேவையை விஸ்தரித்தல், குறிப்பாக அடம்பன் மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் வழங்குதல், வெள்ளாங் குளம், பெரியமடு மருத்துவமனை களில் நடமாடும் வைத்திய சேவைகளை நடாத்துவதற்கு வாகனம் பயன் படுத்துதல், மடு மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவிற் குட்பட்ட பகுதிகளில் மூன்று நாட் கள் நடமா டும் பற்சிகிச்சையை மேற் கொள்ளு தல், பொதுச் சுகாதாரப் பரிசோத கர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்களை மடு மாந்தை மேற்குப் பகுதிகளுக்கு நியமித்து தாய், சேய் நலச் செயற்பாடுகளை விரிவுபடுத் தல் போன்ற முக்கியமான தீர்மானங் கள் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (பா)

# மின்சாரத்திருட்டு; வடமராட்சியில் 7பேர் கைது!

பருத்தித்துறை அதிஉயர் பாது காப்பு வலயப் பகுதியினுள் சட்ட விரோதமான முறையில் மின்சாரத் திருட்டில் ஈடுபட்டுவந்த ஏழுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பொலிசாரால் கைது செய்யப்பட்ட இவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு தலா ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (27)

## புலிகளின்....

படைத்தரப்பால் செய்யப்பட்ட புகாரை அடுத்தே அவற்றை இனங் காண அலுவலகத்தில் தேடுதல் ஒன்றை மேற்கொள் ளப்போவதாகக் கண்காணிப்புக் குழுவினரால் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி அலுவலகமெங்கும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

இந் நிலையில் வெளியே சென்றிருந்த விடுதலைப்புலிகளின் வடமராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அங்கு திரும்பினார். விடுதலைப்புலிகள் போராளிகள் எவரது பிரசன்னமும் அற்ற நிலையில் அரசியல் துறையின் யாழ். மாவட்ட தலை மைச் செயல கத்தினரின் அனுமதி இன்றியும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளுக்கு தமது கடும் ஆட்சேபத்தை அவர் கண் காணிப் புக்குழு பிரதிநிதியிடம் தெரிவித்தார்.

அத்துடன் படையினரது பிரசன் னம் தொடர்பாக இவரால் எழுப்பப் பட்ட குற்றச்சாட்டுக்கு கண்காணிப் புக் குழுவினரது கோரிக்கையின் பிரகாரமே தாங்கள் அங்கு வருகை தந்ததாக படைத்தரப்பாலும் பொலிஸ் அதிகாரிகளாலும் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் அவ்வாறான அழைப்பு எதனையும் தான் விடுக்கவில்லை என கண்காணிப்புக் குழுவின் பிரதி நிதியும் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

சோதனையின் போது எதுவித தொலைத் தொடர்பு சாதனங்களும் மீட்கப்படவில்லை. (27)

## அபிவிருத்தி....

கூடம் அமைப்பதற்கான இடத் தைத் தெரிவு செய்வதற்கென அதிகாரிகள் குழுவினர் நேற்று தெல்லிப்பளை க்குச் சென்றபோது தெல்லிப்பளைச் சந்தியில் வைத்து படையினரால் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.

இதன் போது தெல்லிப்பளைச் சந் திக்கு அப்பால் எவரும் செல்ல முடி யாது என்று படையினரால் கூற ப்பட்டுள்ளது. இதனால் கல்லூரியின் அபி விருத்திக்கென நெக்கோட் நிறு வன த்தால் ஒதுக்கப்பட்ட 42 இலட் சம் ரூபா பணம் பயன்படுத்தப்பட முடி யாது திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரிவிக்க ப்பட்டுள்ளது. (27)

## தென்மராட்சி.....

பொது மக்களின் காணிகளில் இம்முகாம் அமைக்கப்பட்டு வருவது டன் இதனுள் பொதுமக்கள் பிரவேசி க்கக்கூடாது என எச்சரிக்கைப் பலகைகளும் நாட்டப்பட்டுள்ளன.

மந்துவில் கிழக்குப் பகுதியிலும் மக்கள் குடியிருப்புகளில் நிலை கொண்டுள்ள படையினர் தமது பயி ற்சி நடவடிக்கைகளுக்காக அப் பகுதியில் உள்ள பெருமளவு மேட்டு விவசாய நிலங்களைத் தம்வசப் படுத்தி உள்ளனர். (27)

## புதல்வி....

கலைப்பிரிவிலேயே கல்வி பயில அனுமதிக்கப்பட்டது.

இதனால் கவலைக்குள்ளாகிய இந்த மாணவி சாப்பிடாமல் இருந்து வந்தார். புதல்வியின் ஆசையை நிறைவேற்றப் பெற்றோர் பெரும் முயற்சி எடுத்தனர். ஆயினும் அது பயனளிக்காததால் தந்தை தற் கொலை செய்து கொண்டார்.

## அரசாங்கத்தின்......

எமது தலைமை இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பைக் கோருவதற்கு இருகாரணங்கள் உள்ளன.முதலாவதாக கொழும்பிலுள்ள எதிரான அரசியல் சக்தியால் ஏற்படுத்தப்பட்டுள்ள, உறுதியற்ற அரசியல் சூழ்நிலையில், நிரந்தரத்தீர்வு ஒன்றைக்காண முடியாது. இரண்டாவதாக பேச்சுவார்த் தைமேசையில் எடுக்கப்பட்ட முடிவுகள் ஆயிரக்கணக்கான உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்களின் மனிதாபிமான உடனடிப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணத்தவறிவிட்டது.

சமாதான முயற்சிகளில் விடுதலைப்புலிகள் மனப்பூர்வமாகவும் விட்டுக்கொடுப்புடனும் செயற்பட்டாலும் முக்கிய சர்வதேச பிராந்திய சக்திகள் விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் எனப் பெயரிட்டு சர்வதேச அரங்குகளில் தவிர்க்கும் சூழ் நிலை உருவாகிவருகின்றது.

சமாதான முயற்சிகளில் எதிர்க்க முடியாத வெளிநாட்டு சக்திகள் ஈடுபட்டுவருவது தொடர்பாக விடுதலைப்புலிகள் கரிசனைகொண்டுள்ளனர். இதே சக்திகளிடம் சிறிலங்கா அரசாங்கம் நிதியுதவிகளைப் பெறுவது மட்டுமல்லாது சர்வதேச பாதுகாப்பு வலையொன்றை உருவாக்கி தமிழ் மக்களின் தீர்வை நிர்ணயிக்கும் சுதந்திரத்தின் மீது பாரிய அழுத்தங்களை ஏற்படுத்திவருகிறது.

தங்களுடைய பிரேரணைகளின் உள்ளடக்கத்தில் தங்களுடைய அரசாங்கம் விடுதலைப்புலிகள் பிரேரித்த வடக்குக்கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக எதுவுமே குறிப்பிடவில்லை. அதேவேளை உங்கள் பிரேரணையில் குறிப்பிடப்பட்ட மிகவும் வரையறுக்கப்பட்ட நிர்வாக அதிகாரங்களைக் கொண்ட அபிவிருத்திசார்ந்த கட்டமைப்பிலும் புலிகளின் பங்கு பற்றி தெளிவாக வரையறுக்கப்படாதும் குறிப்பிடப்படர்தும் உள்ளது.

அரசாங்கம் நாட்டின் சட்டங்களுக்கு அமையவே செயற்பட முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் உறுதியற்றும் சக்தியற்றும் காணப்படும் நிலையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ தீர்வு காண முடியாது. தமிழ் மக்களுக்கு அரசியல் சுதந்திரத்தை மறுப்பது தொடர்பில் சிங்கள அரசியல் கட்சிகள் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொண்டு செயற்பட்டுவரும் நிலையில் சட்டம் மற்றும் அரசியல் யாப்பு ஆகியவற்றில் அரசாங்கம் தஞ்சம் புகும் பட்சத்தில் தமிழ் மக்கள் எத்தனை காலம் துன்பங்களை அனுபவிப்பர்?

அரசாங்கத்தின் பிரேரணையிலுள்ள உயர் மட்டசபை நிர்வாக அதிகார மற்றதாக, ஆலோசனைச் சபையாக மட்டும், புனரமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து அங்கீகரிப்பதாக மட்டும் உள்ளது. ஆச்சரியப்படத்தக்க வகையில் முடிவெடிக்கும் இந்த அமைப்பில் விடுதலைப்புலிகளின் பங்கு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கும் மத்திய அரசுக்கும் கட்டுப்பட்ட தாகவே வடக்கு கிழக்கு அபிவிருத்தி சபை இருக்குமென்று பரிந்துரைப்பதன் மூலம் வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் தலைமையிலான நிர்வாகம் செயற்படுகிறது எனும் உண்மை நிலையை சிறிலங்கா அரசு நிராகரித்துள்ளது.

சிறிலங்கா அரசு பரிந்துரைத்துள்ள நிர்வாகசபை திறனற்ற அரசு அமைப்புக்களுடன் தொடர்புடைய மற்றுமொரு புதிய அரசியல் நிர்வாக முறை என்றும் அதனால் மனிதாபிமானப் பணியை திறமையாக செயற்படுத்த முடியாது என்றும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குற்ற....

புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் இருப்பதும் தெரியவந்தது.

இவர்களிடம் துப்பாக்கிகளும் ,ரவைகளும் மேலும் புல பொருட் களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## அபிப்பிராய....

தொடர்பாக இருதரப்பினரும் தத்தம் கருத்துக்களைத் தெரிவிக் கவில்லைஎன்று போர்நிறுத்த கண்காணிப்புக் குழுதெரிவித் துள்ளது.

இதேவேளை போர்நிறுத்த கண்காணிப்பு குழுவில் தற்பொழுது 48 பேர் அங்கம் வகிப்பதாகவும் அந்த எண்ணிக்கை அடுத்தமாதம் முதல் 57 பேராக அதிகரிக் கப்படவுள்ளதாகவும் போர் நிறுத்தகண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

## அரசு.....

வையாக உள்ளன.

ஏனென்றால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்திடம் தொடர்ந்தும் வலியுறுத்திய இடைக் கால நிர்வாகம் நிச்சயமாக வடக்கு-கிழக்கிற்கு தேவைப்படுகின்றது. அதுவும் ஒரு வருடமும் ஐந்து மாதமும் கழிந்த பின்னர் வடக்கு-கிழக்கு மக்களுக்கு எந்தவொரு இலாபமும் பெறமுடியாத ஒரு கட்டத்தில் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்துகொள் வது அந்த மாநாட்டின் மூலமாக கிடைக்கப் போகின்ற நிதி சரியான ஒரு தெளிவான ஒரு நிர்வாகம் மூலமாகத்தான் செலவு செய்யலாம்.

இலங்கையின் அரசியல் கட்சிகள் முக்கியமாக சிங்கள அரசியல் கட்சிகள் ஒரு அரசியல் யாப்பொன்றைத் தயாரித்து அந்த அரசியல் யாப்பு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு அரசியல் யாப்பாக இருக்கின்றது.

அந்த அரசியல் யாப்புக்கு கீழே தான் ஒரு இடைக்கால நிர்வாகம் கொண்டு வரவேண்டும் என்ற பிரச்சினையைத் தீர்க்கவென்று யாரும் கருதினால் அது நியாயமான ஒரு விளக்கம் அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இயற்கையோடு இணைந்திடுங்கள்
இயல்பாய் எல்லாம் பெற்றிடுங்கள்


## தேவை

ஈழநாதம் நிறுவனத்தில் கடமைபுரிய கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. மொழி பெயர்ப்பாளர் (ஆங்கிலம் - தமிழ்)

02. கணனி
- கணனியில்அடிப்படைக்கல்வி முடித்தவர்கள்.
- Page Maker தெரிந்தவர்கள்.
- தமிழ் தட்டெழுத்தாளர்கள்.

03. ஒப்புநோக்குனர்
- க.பொ.த. உ/த சித்தியடைந்தவர்கள்.
- ஓய்வு பெற்ற தமிழ்ப் பாட ஆசிரியர்கள்.

மேற்படி தகைமையுடையவர்கள் எதிர் வரும் 04.06.2003 புதன்கிழமை கிளி. ஜெயந் திநகரில் அமைந்துள்ள ஈழநாதம் பணி மனையில் மு.ப. 10.00 - 12.00 மணிவரை நடை பெறும் நேர்முகத் தேர்வில் பங்கு கொள் ளவும்.

கிளி. நகரில் வசிப்பவர்களுக்குமுன்னு ரிமை அளிக்கப்படும்.

ஈழநாதம்


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.